## சுருக்கம்

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை ஏற்று "**மேற்கு முகப்பேர் கனக துர்கா**" தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

## வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை

33235

**அரசாணை (டி) எண். 282**

**நாள். 11.07.2014**
**ஜய, ஆனி 27,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**படிக்கப்பட்டது:–**

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.02, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர் கடித எண்.சட்டக்குழு–4/11046/2014, நாள் 13.05.2014 தேர்வுக்குழு எண். 9/2014–2015.
4. சென்னை உயர்நீதிமன்ற நீதிபேராணை மனு எண்கள் 31064, 30808, 29757 மற்றும் 29891/2013 நாள் 16.04.2014.
5. தமிழ் வளர்ச்சி இயக்குநர் கடித எண்.ந.க.நிதி.3/4423/2014, நாள் 27.5.2014.
6. தலைவர் மத்திய திரைப்பட தணிக்கை வாரியம் அவர்களின் சான்றிதழ் எண்.DIL/396/2014/R-33/25/2014-CHEN, நாள் 09.06.2014.
7. முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் கடிதம் எண்.சட்டக்குழு 4/11046/2014, நாள் 16.6.2014.

-----

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. முதன்மைச் செயலர் / வணிகவரி ஆணையர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கண்ட குழு "**மேற்கு முகப்பேர் ஸ்ரீ கனக துர்கா**" தமிழ் திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்டு, பார்வையிட்ட அனைத்து உறுப்பினர்களும் வரிவிலக்கு அளிப்பதற்கு பரிந்துரை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

3. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ் வளர்ச்சி இயக்குநர் **ஸ்ரீ** என்பது தமிழ் சொல் அல்ல என்றும் கனக துர்கா ஆகிய சொற்கள் வடசொற்கள் என்றாலும், இவை பெயர்சொற்கள் என்பதாக கருதி பார்க்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

4. இதற்கிடையில், முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் "**மேற்கு முகப்பேர் ஸ்ரீ கனக துர்கா**" என்ற திரைப்படத்தின் விண்ணப்பதாரர், திரைப்படத்தின் தலைப்பில் **ஸ்ரீ** என்ற எழுத்து சமஸ்கிருதம் என அறியப்பட்டதால் **ஸ்ரீ** என்ற எழுத்தினை நீக்கி "**மேற்கு முகப்பேர் கனக துர்கா**" தமிழ் பெயரை தலைப்பாக வைக்க முடிவு செய்து, மத்திய திரைப்பட தணிக்கை வாரியத்தால் தணிக்கை சான்று பெறப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

5. மேற்கண்ட சூழ்நிலையில், கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின், பார்வையிட்ட அனைத்து உறுப்பினர்களும் கேளிக்கை வரி விலக்களிக்க பரிந்துரை செய்துள்ளதாலும், பார்வை ஆறில் படிக்கப்பட்ட மத்திய திரைப்பட தணிக்கை வாரிய தலைவரின் சான்றிதழ் அடிப்படையில், "மேற்கு முகப்பேர் ஸ்ரீ கனக துர்கா" எனும் இத்திரைப்படத்தின் பெயர் "**மேற்கு முகப்பேர் கனக துர்கா**" என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாலும், அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, நாள் 21.07.2011–இல் உள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்வதாலும், மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற ஆணையின் அடிப்படையில் நீதிபேராணை மனு எண்கள் 31064, 30808, 29757 மற்றும் 29891/2013–இல் சென்னை உயர்நீதிமன்றம் வழங்கும் இறுதி தீர்ப்பிற்கு உட்பட்டு, தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் பிரிவு 8, உட்பிரிவு 2ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, "**மேற்கு முகப்பேர் கனக துர்கா**" தமிழ் திரைப்படத்திற்கு ஆணையிடப்படும் நாள் முதல் கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்து ஆணையிடலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.
நகல்:
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
சிறப்பு நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.